முத்துராமலிங்கம் என்று சொன்னால், அது தேவர் திருமகனைக் குறிப்பிடாது என்ற காரணத்தால் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் என்று அந்த மாவட்டத்திற்கு பெயர் அழைக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதம் முடிவுற்றது. பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (4—4—1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-33 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப் படிக்கான விதிகளும் ஆணைகளும்.

37. சங்கரநாயனார் கோவில் அங்காடியின் அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதியிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 2—9—1987-ஆம் நாளிட்ட 1720 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

38. 1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு, வேளாண் விளை பொருள் அங்காடிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 2—9—1987 ஆம் நாளிட்ட 1724 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23?1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

39. சேலம், கருமான் துறை முறைப்படுத்தப்பட்ட அங்காடிக்கான அங்காடிப் பகுதியினை அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 5—10—1987 ஆம் நாளிட்ட 1907 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

40. கீழமங்கலம் அங்காடியின் அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதியிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 6—11—1987ஆம் நாளிட்ட 2083 ஆம் எண்

1989 ஏப்ரல் 3]

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

48. தமிழ்நாடு விழிப்புப் பணிக் குழுவின் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதற்கொண்டு 1987ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் முடியஉள்ள கால அளவிற்கான இருபத்தியொன்றாம் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS